## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 317/2018

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 20.04.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : நடராஜன் Father's Name : ராமசாமி

துவக்க நேரம்: 11.50 A.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

1. 2-ம் வாதி சித்ரா எனது உறவினரா என்றால் ஆமாம், பங்காளி குடும்பத்தைச் சேர்ந்தவர். 2-ம் வாதிக்கு நான் நிலம் கிரையம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் வா.த.சா.ஆ.1-ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் 2-ம் வாதி மற்றும் அவரது குடும்பத்தினர் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி நிலத்திற்கு மேற்கு புறத்தில் உள்ள சீனிவாசன் என்பவரிடமிருந்துதான் பிரதிவாதியின் முன்னோர்கள் நிலத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கும், சீனிவாசன் மற்றும் அவரது மகன் நேதாஜி குடும்பத்துக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட கிணறு உள்ளது என்றால் சரிதான்.

2. தாவா சொத்தான ச.எண்.332/7-ல் உள்ள நிலமானது பிரதிவாதிக்கும், சீனிவாசன் குடும்பத்திற்கும் பாத்தியமானது என்றால் சரிதான், ஆனால் அந்த நிலம் ச.எண்.332/7A-என உட்பிரிவு செய்யப்பட்டு அதில் பொதுபாதை உள்ளது. நான் சொல்வதுபோல் ச.எண்.332/7A என எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. ச.எண்.332/7-ல் உள்ள நிலத்தில் போக்குவரத்திற்காக பிரதிவாதியும், சீனிவாசன்

குடும்பமும் சேர்ந்து அவர்கள் மட்டுமே பயன்படுத்திக்கொள்ள அவர்களில் பட்டா நிலங்கள் பாதை உள்ளது என்றால் அந்த பாதையை நாங்கள் 100 ஆண்டுகளாக பயன்படுத்திவருகிறோம். எங்கள் பாகபத்திரத்திலோ, 2-ம் வாதி கிரைய பத்திரத்திலோ எந்த சர்வ எண்ணில் பாதை செல்கிறது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ச.எண்.332/7A-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் பிரதிவாதிக்கு எழுதிவைக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்திலும் மேற்படி பாதை குறிப்பிடப்பட்டுள்ளது.

3. வா.த.சா.ஆ.9-ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் ச.எண்.332/7A-ல் பொது பாதை செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு எழுதப்படவில்லை. ச.எண்.332/7-ல் உள்ள நிலத்திற்கு அருகில் உள்ள ச.எண்.332/10C-ல் உள்ள நிலம் எனக்கு சொந்தமானது என்றால் எனது தம்பிக்கு சொந்தமான நிலம். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் எனது தந்தை, நான் மற்றும் எனது சகோதரர்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தகப்பனாருக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின்மூலம் B அட்டவணை சொத்து எனக்கும், C அட்டவணை சொத்து எனது தம்பி சந்திரசேகரனுக்கும், D அட்டவணை சொத்து மணிவண்ணனுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. தாவா வண்டிப்பாதைக்கு தென்புறம் உள்ள ச.எண்.332/10C நிலம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தம்பி சந்திரசேகரனுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி நிலத்திற்கு நான்கு எல்லைகளாக சீனிவாச நாயக்கர் நிலத்திற்கு தெற்கு, முத்துசாமி கவுண்டர் நிலத்திற்கு கிழக்கு, ச.எண்.332/11-க்கும் மேற்கு, புலவர் பெரியசாமி நிலத்திற்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தின் பொது சாராவில் ச.எண்.332/10C, 332/11-ல் வடபுறமாக உள்ள

தடத்தினை 12 அடி அகலத்தில் புதிதாக பாதை அமைத்து அதற்கான செலவுகளை B, C பாகஸ்தர்கள் ஏற்றுக்கொண்டு வண்டிவாகனங்கள் செல்ல பொது பாதையாக பயன்படுத்திகொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் ச.எண்.332/7-ல் பொது தடம் இருந்திருந்தால் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் அதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் ஆனால் சீனிவாச நிலத்திற்கு தெற்கு என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

5. 2-ம் வாதி கிரையம் பெற்ற வா.த.சா.ஆ.1-ஆவணத்தின் சொத்து விவரத்தில் கிரையம் பெற்ற சொத்தானது ச.எண்.342/5-ல் ஏக்.2.90 செண்ட் நிலத்திற்கு நான்கு எல்லைகளாக செங்கமலை கவுண்டர் நிலத்திற்கு தெற்கு, மேற்படி சர்வே எண்ணில் உள்ள ஏக்.0.05 செண்ட் நிலத்தில் அமைந்துள்ள நடராஜனுக்கும், சித்ராவிற்கும் மட்டும் பாத்தியமான கிழமேல் பொதுபாதைக்கு வடக்கு, நடராஜன் நிலத்திற்கு கிழக்கு, ராமசாமி, சித்ரா ஆகியோர்களின் இதர நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் கிரையம் பெற்ற சொத்திற்கு பஞ்சாயத்து பொது வண்டிபாதையிலிருந்து ராமசாமிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட ச.எண்.332/10C-ல் உள்ள நிலத்தில் வடபுறத்தில் கிழமேலாக செல்லும் வண்டிப்பாதையின்மூலம் ச.எண்.332/11, 338, 337 ஆகிய சர்வே எண்களில் செல்லும் தென்வடல் ஓடையின்மூலம் ச.எண்.342/5-ல் கிழமேலாக சென்று பின் தென்வடலாக சென்று நிலங்களை அடையவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வா.த.சா.ஆ.3-ஆன செல்லமுத்து கவுண்டர் மகன் முத்துசாமி கவுண்டர் கிரையம் பெற்ற பத்திரத்தில் ச.எண்.332/10-ல் உள்ள நிலத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ள நான்கு எல்லைகளில் பொது பாதைக்கு கிழக்கு, தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள பொதுபாதை ச.எண்.332/7

கிழமேலாக சென்று பின்பு தென்வடலாக செல்கிறது என்றாலும் எனவே ச.எண்.332/7-ல் உள்ள பாதையின் ஒரு பகுதி மட்டுமே பொது பாதை என்றாலும் மீதி பகுதி பிரதிவாதியின் நிலத்தில் செல்கிறது என்றாலும் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள வா.த.சாஆ.11-ஆன புலவரைபடத்தில் ச.எண்.332/7B -ல் தான் பொதுபாதை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த பாதை தென்வடலாக தண்ணீர்பந்தல்வரை செல்லும் பஞ்சாயத்து பாதை ஆகும். வா.த.சா.ஆ.11-ல் ச.எண்.332/7A-ல் பாதை செல்வதாக குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். ஆனால் கடந்த 1966ம் ஆண்டு முத்துசாமி கிரையம் பெற்ற நிலத்தில் ச.எண்.332/7A-ல் வண்டிப்பாதை உள்ளதாக காட்டப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் ச.எண்.332/7A-ல் பாதை இருப்பதாக முத்துசாமி கிரையம்பெற்ற ஆவணத்தில் (வா.த.சா.ஆ.3) குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல.

8. கடந்த 1966ம் ஆண்டு முத்துசாமி கிரையம் பெற்ற பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வண்டிப்பாதை தாவா வண்டிப்பாதை என்றால் சரியல்ல. அதுதான் தாவா வண்டிப்பாதை. வா.த.சா.ஆ.10-ஆன அ பதிவேடு ஆனது முழுமையான ஆவணம் இல்லை என்றாலும் ச.எண்.332-ற்கான அ பதிவேடு தாக்கல் செய்யப்பட்டால் எனது வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் அந்த ஆவணத்தை முழுவதும் தாக்கல் செய்யாமல் ச.எண்.332/7A-வரை மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ச.எண்.332/7A-நிலத்திற்கான பட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

9. 2-ம் வாதி கிரயைம் பெற்ற ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிவர்த்தனை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

ச.எண்.332/7A- பட்டா பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.8-ஆன மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் ச.எண்.332/7A-ல் வண்டிப்பாதை இல்லை என்றால் சரியல்ல, அந்த பாதையைதான் தற்பொழுதுவரை நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். தாவா வண்டிப்பாதை முழுவதும் கற்கட்டுகள் கட்டப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளதும், மரங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளதும் தவறு என்றாலும் அதுபோல் அமைப்பு எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.

10. தாவா சொத்து விவரத்தில் தாவா பாதையானது எவ்வளவு அகலம், நீளம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் அதுபற்றி குறிப்பிட்டிருக்கிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பாதை பொதுபாதை அல்ல என்றாலும் அந்த பாதை பிரதிவாதியின் பட்டா நிலத்தில் அவர் பயன்படுத்திக்கொள்ள போடப்பட்ட பாதை என்றாலும் சரியல்ல, அந்த பாதையைதான் நாங்களும் பயன்படுத்தி வருகிறோம். ச.எண்.332/10C எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் பாதை இருப்பதாக நாங்கள் பயன்படுத்தி வருகிறோம் அந்த பாதையை எடுத்துவிட்டு வேண்டுமென்றே சட்ட விரோதமாக பிரதிவாதியின் நிலத்தல் உள்ள பாதையை பயன்படுத்த வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, அதுபோல் எந்த பாதையும் நாங்கள் அழிக்கவில்லை. தற்பொழுது ச.எண்.332/10C பாதை உள்ளதா என்றால் உள்ளது. அந்த பாதை ச.எண்.332/7A உள்ள பாதையில் இணைந்து உள்ளது. அவ்வாறு ச.எண்.332/10C -ல் உள்ள பாதை ச.எண்.332/7A-ல் உள்ள பாதை இணைந்து உள்ளதாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு எனது வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல.

11. ச.எண்.332/7A-ல் உள்ள பாதையானது பிரதிவாதி மற்றும் சீனிவாசன் நாயக்கர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பாதை என்றாலும் அந்த பாதையை பயன்படுத்த

வாதிகளாகிய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் எங்கள் நிலங்களுக்கு செல்ல ச.எண்.332/10 C-ல் நிலத்திலேயே பாதை உள்ளது என்றாலும் சரியல்ல. ச.எண்.332/7A-ல் உள்ள பாதை பொது பாதை என்று கூறும்பட்சத்தில அதுதொடர்பாக ஊர்மக்கள் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை. எங்களுக்கு தேவை என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வாதிகளாகிய எங்களுக்கு தனித்தனியாக உரிமை இருக்கும் பட்சத்தில் நானும், 2-ம் வாதியும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் இவ்வழக்கு பிரதிவாதிக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

முடிவு நேரம்: 01.03 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.317/2018, Dt.20.04.2026.